# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்
உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 51 | International Editor : MICHAEL. W. SMITH | இதழ் - 51

## சீஷர்களாக அழைக்கப்படுதல்

கலிலேயாவின் கடற்கரையில் இயேசு நடக்கையில் பேதுரு மற்றும் அந்திரேயாவை கண்டு அழைத்தபோது இயேசுவுக்கு பின் சென்றார்கள். என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்.மத்தேயு 4 : 18 - 20 . இன்றும் இயேசு நம் ஒவ்வொரு வரையும் அவருக்கு பின் சென்று சீஷர்களாகும்படி அழைக்கின்றார். இயேசுவுக்கு சீஷராகுதல் கிறிஸ்துவுக்குள் ஐக்கியமாகுதல் ஆகும். வாழ்க்கையே மாறுதலாகும். இயேசுவைப்போல் வாழ்க்கையில் நடந்து கொள்வதும் அவருடைய கற்பனைகளை கைக்குள்வதும் இயேசுவின் போதனைகளின்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்வதும், பேதுரு மற்றும் அந்திரேயா எவ்வாறு தங்கள் வலைகளை விட்டு இயேசுவுக்கு பின் சென்றார்களோ அதுபோலவே இயேசுவின் சீஷராகும்படி நாமும் பின்செல்வோம்.இயேசுவின் சீஷராக உண்மையாக வாழ்வோரின் வாழ்வு உலகத்தின் பால் உள்ளஅன்பு, அதன் இச்சை களாலோ, வேறு எந்தவிதமான உலகப்பற்றுத லினாலோ உற்சாகப்படுத்தப்பட மாட்டாது. குறிக்கோள், நோக்கம், திட்டங்கள், எண்ணங்கள், எல்லாம் கிறிஸ்துவின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டும்.

இயேசுவின் சீஷராயிருக்க விரும்புகிறவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் என்று இயேசு கூறுகையில் மத் 16 : 24, 25 வசனங்களில் ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து,தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னை பின்பற்றக்கடவன்.சீஷன் என்பவன் உலகத்தின் இச்சைகளை வெறுக்கிறவனாக கண்டிப்பாக இருக்க வேண்டும் (லூக் 14 : 33). அரைகுறை மனதோடு இருப்பவர்கள், இயேசுவுக்கு சீஷனாக மாற முழுமையான அர்ப்பணிப்பும், அபிஷேகமும் தேவை.பேதுருவும், அந்திரேயாவும் இயேசுவை பின்பற்றி வந்தபோது தங்கள் வலைகளை விட்டுவிட்டு வந்தார்கள். கிறிஸ்துவினிடத்தில் வர நீங்கள் விட்டு வர வேண்டிய காரியங்கள் என்ன,ஜனங்கள் உங்களில் கிறிஸ்துவின் கிரியைகளைக் காண முடிகிறதா,கனிதரும் கிறிஸ்தவ ஜீவியம் உண்டா,



ஆரம்பத்தில் இயேசு 12 சீஷர்களை மாத்திரம் அழைத்து, தம்மை பின்பற்றும் படி அழைத்தார். யூதாஸ் காரியோத்து தவிர மற்ற 11 சீஷர்களும் முழுமையாக தங்களுடைய வாழ்வை கர்த்தருக்கு என்று அர்ப்பணித்தார்கள். அவர்களுடைய ஒரே நோக்கம் சுவிசேஷத்தை அறிவிப்பதும், ஜனங்களுக்கு உதவிசெய்வதுமே இவர்களில் 10 பேர் தேவனை விசுவாசித்ததி னிமித்தம் கொடூரமான மரணத்தை தழுவ நேரிட்டது. ஆதிகால வாழ்வுக்கும், அழைக்கப்பட்ட நம் அழைப்புக்கும் மிகவும் சவாலான ஒன்றாக இருக்கும். ■

**ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்**


| சீஷராக அழைக்கப்படுதல் | தலையங்கம் | பேதுரு | பர்தலமெயு, யூதாஸ், சின்ன யாக்கோபு, மத்தேயு, தோமா | சீமோன், ததேயு |
|---|---|---|---|---|
| | | 3 | | |
| | | அந்திரேயா, பிலிப்பு, யோவான், யாக்கோபு | | |
| 1 | 2 | 4-5 | 6-7 | 8 |

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; எபிரெயர் 12 : 1

இந்த இதழானது மற்ற இதழிலிருந்து மாறுபட்டது வேதாகம விளக்கங்களும் தகவல்களும் இடம்பெறவில்லை. இயேசுவின் பன்னிரு சீஷர்களையும் குறித்து சுருக்கமாக எழுதியுள்ளேன். இவர்களுடைய நோக்கமும் தியாகமும் சபைகள் உருவாவதிலும் மிகப்பெரும் தாக்கத்தை உண்டாக்கினதினிமித்தம் தேவனால் எனக்கு உணர்த்தப்பட்டது போல இன்னும் அநேகர் சாட்சியாக ஏற்பட்டார்கள். 2024 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்களின் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு இன்றும் எப்படி ஒரு நல்ல சீசனாக நாம் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. கிறிஸ்துவை மறுதலிப்பதை விட இரத்த சாட்சியாய் மரித்து மடிந்து போவதை பாக்கியமாக எண்ணினார்கள். இன்று கிறிஸ்தவர்கள் ஆகிய நம்முடைய வாழ்க்கை எவ்வளவேணும் சீஷர்களின் வாழ்வோடு ஒப்பிடவே முடியாத அளவுக்குத்தான் இருக்கிறது. தேவசித்தத்தை அறிந்து அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் மாற நமக்கு கர்த்தர் தாமே உதவி செய்வாராக. அதிகமான அர்ப்பணிப்பும் தியாகமும் தான் இன்று தேவையான ஒன்று .நம்மில் பலர் ஒரு கையில் கிறிஸ்துவையும் இன்னொரு கையில் உலகத்தையும் பிடித்து வைத்துக் கொண்டு வாழ்கின்றோம். எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவை மாத்திரம் பின்பற்றுவோமாக.

12 பேரை குறித்து நீங்கள் அறிந்து கொண்டபின் இயேசு கிறிஸ்து மேல் ஆழமான அர்ப்பணிப்புடன் சவாலாக வாழ உற்சாகப்படுத்தப்படுவீர்கள் என்பதே என்னுடைய ஜெபமாய் இருக்கிறது.

## இயேசுவின் சீஷர்கள்

- சீமான் பேதுரு
- அந்திரேயா (பேதுருவின் சகோதரன்)
- யாக்கோபு (செபதேயுவின் குமாரன்)
- யோவான் (யாக்கோபின் சகோதரன்)
- பிலிப்பு
- பர்தலெமேயு( நாத்தான்வேல்)
- தோமா
- மத்தேயு ( லேவி )
- யாக்கோபு (அல்பேயுவின் குமாரன்)
- ததேயு லெபேயு, யூதாஸ்
- சீமோன் கானானியன் செலோத்தே
- யூதாஸ் ஸ்காரியோத்து

(மத்தேயு 10 : 2-4, மாற் 3 : 14 -19 லூக் 6 : 13-16)



கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க **www.thegospeltruth.org** என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-

**ஆயர்.W.S.வேதா, காஸ்பெல் ட்ருத், 2/227, சர்ச் தெரு, கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107**

# பன்னிரெண்டு சீஷர்கள்

பின்வரும் வாழ்க்கை வரலாறு பல்வேறு ஆதாரங்கள் வாயிலாக திரட்டப்பட்டது. வேதத்திற்குள் சொல்லப்பட்டவைகளையும் தாண்டி சில உண்மையான நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. சில குழப்பமான சரித்திர எழுத்து ஆதாரங்கள் பாரம்பரியங்கள் வாயிலாக இந்த மனிதர்களின் வாழ்வும் மரணமும் விவரிக்கப்பட்டுள்ளது. 12 சீஷர்களின் வாழ்க்கை வரலாறு என்பது தூண்டுதலும் சவாலுமானது. எனினும் நமது இரட்சகரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவை குறிப்பிட்டு புதிய ஏற்பாட்டு சரித்திர உவமைகளை குறித்து ஒப்புக்கொள்ள வேண்டியது மிகவும் மிகவும் அவசியமான ஒன்று.
(படங்கள் யாவும் உதாரணத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது )

## பேதுரு

### கல், விசுவாசத் தூண்டலின் வழிகாட்டி



சீமோன் என்னும் பேர் கொண்ட பேதுரு கலிலேயாவின் கடற்கரை ஓரத்தில் உள்ள கிராமத்தில் வாழ்ந்த மீன் பிடிக்கிறவர் தான். பின்பு கப்பர் நகூம் என்னும் பட்டணத்தில் தன் மனைவி மற்றும் சகோதரனாகிய அந்திரேயாவுடன் வாழ்ந்து வந்தார். அவருடைய தைரியமான குணாதிசயம் இயேசுவின் நெருங்கிய நண்பனாக மாற ஏதுவாயிற்று. இயேசு தான் பேதுரு என்ற பெயரிட்டு அழைத்தார். பாறை அல்லது கல் என்று அர்த்தம் கொள்ளும் ஆவிக்குரிய குணாதிசயங்களை நாம் பின் நாட்களில் பேதுருவின் வாழ்வில் காணலாம்.

கேபா (யோவான் 1 : 42 1 கொரி 1 : 12 ; 3: 22 ; 15 : 5 கலாத்தியர் 2 : 9) என்பது கள் அல்லது பாறை என பொருள்படும் சீரிய வார்த்தை. பேதுருவை இயேசுவின் நெருக்கமான சீஷன் எனலாம். ஏனெனில் மறுரூபமாக்குதல் (மத்தேயு 17 : 1 -8) சம்பவத்திலும் கெத்சமனே தோட்டத்தில் இயேசு மிகுந்த வியாகுலத்தோடு ஜெபிக்கையில் ( மத்தேயு 26 : 36 - 37 ).பேதுருவின் விசுவாசம் வலிமையானது என்றாலும் அவருடைய பயணங்களில் தைரியம் மற்றும் பலவீனம் இரண்டையுமே காண முடிகிறது. இயேசு ஜலத்தின் மேல் நடந்ததைக் கண்டு பேதுருவும் நடந்தார். ஆனாலும் மூழ்க தொடங்கின போது சந்தேகப்பட தொடங்கினார். (மத்தேயு 14 : 29 -30 ) இயேசு உபத்திரவப்படுகையில் மூன்று முறை பேதுரு இயேசுவை மறுதலித்தார். பின்பு மனங்கசந்து அழுது மனம் திரும்பினார். இயேசு உயிர்த்தெழுந்த பின்பு பேதுருவுக்கு தரிசனம் ஆகும் போது என்னுடைய ஆடுகளை மேய்ப்பாயாக என்கிறார் (யோவான் 21: 15-17)

இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு மிகப்பெரும் சபை தலைவராக கற்பாறை போன்று உறுதியாக சபைகளை ஊக்குவித்து உருவாக்கினவர் பேதுரு. குறிப்பாக எருசலேமில் வாசம் செய்த யூதர்கள் மத்தியில் அவருடைய ஊழியம் இருந்தது. பெந்தகொஸ்தே நாளின் போது அவர் செய்த பிரசங்கத்தை கேட்டு ஏறக்குறைய 3000 பேருக்கு அதிகமானோர் ஒரே நாளில் மனம் திரும்பி இரட்சிக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 2 ). பேதுரு எருசலேம் நகரத்தின் சபைகளை வழிநடத்தி அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்ததின் நிமித்தம் புறஜாதியாரையும் விசுவாசத்திற்கு உள்ளாக வழி நடத்தினார். (அப்போஸ்தலர் 10) பாரம்பரியத்தினாலே எருசலேமில் இருந்தாலும் பின் நாட்களில் அந்தியோகியா மற்றும் ரோமாபுரிக்கும் பயணித்து உபத்திரவத்திலும் ஊழியத்தில் உறுதியாக தரித்திருந்தார்.

பேதுரு புதிய ஏற்பாட்டில் 1 பேதுரு மற்றும் 2 பேதுரு ஆகிய இரண்டு நிருபங்களையும் எழுதினார்.இன்றும் உபத்திரவத்திலும் சோதனையிலும் எப்படி விசுவாசிகள் தங்களை உறுதியாக காத்து நிற்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். மேலும் மாற்கு சுவிசேஷத்தை எழுதின ஜான் மார்க் பேதுருவோடு கூட இருந்து சாட்சியை கண்டவர்

64- 68 காலகட்டத்தில் நீரோ மன்னனின் ஆட்சிக்காலத்தில் ரோமாபுரி நகரத்தில் இரத்த சாட்சியாக மரித்தார். வரலாறு கூறுகிறது அவரோ இயேசுவைப் போல சிலுவையில் மரித்தார். ஆனால் தலைகீழாக தன்னை அறையும்படி அவர் கேட்டுக்கொண்டார். பயந்த சுபாவம் உள்ள ஒரு சீஷன் பின் நாட்களில் மிகப்பெரும் தைரியமான தலைவராக உருவானதை பேதுருவின் வாழ்வில் இருந்து அறியலாம். ஆகவேதான் அவர் விசுவாசத்தின் தூணாகவும் சபையின் கற்பாறையாகவும் இன்றும் நினைவு கூறப்பட்டு சாட்சியாக நிற்கிறார்.■

## அந்திரேயா

### இணைப்பாளர் இயேசுவிடம் ஜனங்களைக் கொண்டு வந்தவர்



பேதுருவின் சகோதரன் அந்திரேயாவும் மீன்பிடிக்கும் தொழில் செய்தவர். அவர் பெத்சாய்தாவில் பிறந்தவர். கலிலேயாவின் வடக்கு கரையோரம் இருக்கின்ற ஒரு மீனவ கிராமம் தான் அது. இயேசுவுக்கு சீஷராவதற்கு முன்பு அந்திரேயா யோவான்ஸ்நானகனை பின்பற்றுகிறவராக இருந்தார். அங்கேதான் இயேசுவை முதலில் சந்தித்தார்.

இயேசுவை குறித்து யோவான் ஸ்நானன் இவர் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்று சாட்சி பகர்ந்த பிறகு தான் இயேசுவை பின்பற்றுகிற முதல் சீஷன் ஆனார். (யோவான் 1 : 35- 40) உடனடியாக தம் சகோதரரான பேதுருவையும் இயேசுவிடம் அழைத்து வந்தார். இங்கேயே அவருடைய ஊழியம் துவங்கப்படுகிறது.
இயேசுவால் அழைக்கப்பட்ட பின்பு அந்திரேயா இயேசுவோடு பல இடங்களுக்கு பயணித்து ஊழியத்தை நிறைவேற்ற உறுதுணையாக இருந்தார். ஐயாயிரம் பேருக்கு அப்பத்தையும் மீனையும் பகிர்ந்து கொடுக்க காரணமாக இருந்த சிறுவனை கண்டுபிடித்து கூறியவர் இவரே (யோவான் 6 : 8 - 9).இயேசுவின் உயிர்த்தல்களை தொடர்ந்து பேதுருவைப் போல இவரும் யூத மக்களின் மத்தியில் பல்வேறு ஆதி அப்போஸ்தலர் திருச்சபைகளின் பெருமைமிகு வழிகாட்டியாக திகழ்ந்தார். வரலாற்றிலேயே அந்திரேயா பிரசங்கித்த இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

யூதேயா சமாரியா கருங்கடலை சுற்றியுள்ள பகுதிகள் மேலும் இன்றைய கிரேக்க மற்றும் துருக்கி நாடுகளும் அடங்கும். சைத்தியா, உக்ரைன், ரஷ்யா வரை அவர் சென்று புறஜாதியாருக்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்து கிறிஸ்தவ சமுதாயங்கள் வளர பாடுபட்டார். கிரீஸ் நாட்டின் பத்ரா தீவில் 60 - 70 காலத்தில் அந்திரேயா இரத்த சாட்சியாக மரித்தார். கவர்னர் அவர்களின் மனைவி இவர் நிமித்தம் சுகம் பெற்று மனம் மாறியதால் கவர்னரால் சிலுவையில் அறையப்பட்டார். அவருடைய வலியுறுத்தலினால் எக்ஸ் வடிவத்தில் தொங்கவிடப்பட்டார். ஏனெனில் அவர் இயேசு மரித்த விதமாய் தான் மரிக்க விரும்பவில்லை. சிலுவையில் தொங்கிக் கொண்டே இரண்டு நாட்களாக ஜனங்களுக்கு போதித்தார். ஒரு சுவிசேஷராக பொறுப்புடன் இயேசுவின் போதனையை குறிப்பாக போதித்தார். அவருடைய வாழ்க்கை சீஷத்துவ ஆவி மற்றும் சுவிசேஷத்தினால் பலர் திருச்சபையில் கிறிஸ்துவை பின்பற்றினார்கள் ■

## பிலிப்பு

### சத்தியத்தை தேடுபவர், நடைமுறை மிஷனரி



பிலிப்பு என்பவர் பெத்சாயிதா பட்டணத்தார். பேதுரு மற்றும் அந்திரேயா அவர்களின் ஊரைச் சேர்ந்தவர் தான். (யோவான் 1 : 44). சுவிசேஷகரான பிலிப்பு என்பவரும் இவரும் ஒன்றல்ல (அப்போஸ்தலர் 6 : 5). இயேசுவால் அழைக்கப்பட்ட முதல் சீஷர்களில் இவரும் ஒருவர். இயேசுவை கைது செய்த போது பிலிப்பு வேத வாக்கியங்களும் தீர்க்கதரிசனங்களும் நிறைவேறியதை அறிந்து கொண்டார்.

தன் சினேகிதனான நாத்தான்வேல், பர்தெலமேயு இயேசுவை சந்திக்கும்படி அழைத்து வந்தார். பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு: நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்; அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான் (யோவான் 1 : 45) இந்த அறிமுகப்படுத்துதலை பிலிப்புவின் உற்சாகமும் விசுவாசமும் மற்றவர்கள் கிறிஸ்துவுக்குள் வர காரணம் ஆயிற்று. சுவிசேஷங்களில் பலமுறை பிலிப்பு தோன்றுகிறார். அவர் இயேசுவிடம் அநேக கேள்விகளை கேட்கிறார். யோவான் 6 : 5-7. பிலிப்பு 5000 பேரை போஷிப்பதில் வரும் நடைமுறை சிக்கல்களை கூறுகிறார். பிறகு இயேசுவிடம் பிதாவை எங்களுக்கு காண்பியும் என்கிறார். ஆகவே கிறிஸ்து திரித்துவத்தையும் மூவரும் ஒன்றே என்பதையும் தெரிவிக்கிறார் (யோவான் 14 : 8-9) .
இயேசு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு பிலிப்பு மிஷினரிக்கான பணியை துவங்குகின்றார். அவர் சமாரியா தற்போதைய துருக்கி மற்றும் கிரீஸ் போன்ற நாடுகளில் பிரசங்கித்தார். ஆதி கால கிறிஸ்தவ திருச்சபைகள் அந்த பகுதிகளில் வலுவாக எழும்பிற்று. பிலிப்புவின் மரணத்தை குறித்து அனேக வரலாறு உண்டு. சில வரலாற்று அறிஞர்கள் பைரிஜியா (துருக்கி) நாட்டில் உள்ள தைரியபாலீஸ் பகுதியில் 80களில் சிலுவையில் தலைகீழாக தொங்க வைத்து மரித்தார் என்று சொல்லுகிறார்கள். சில வரலாற்று குறிப்புகளின் படி வட ஆப்பிரிக்கா கண்டத்தில் அவர் கல்லெறியப்பட்டு கணுக்கால் கட்டப்பட்டு தொங்கவிடப்பட்ட நிலையில் மரித்ததாக நம்பப்படுகிறது . தன்னை அர்ப்பணித்து பல்வேறு பகுதிகளில் ஊழியம் செய்தார். விசுவாசத்தையும் நடைமுறை வாழ்வையும் ஒன்றறக் கலந்த ஒரு வரலாறாக காண முடிகிறது ■

## யோவான்

### அன்பான சீசன், உண்மையானவர்



யோவான் இயேசுவுக்கு அன்பான சீஷனாக அறியப்படுகிறார் . செபதேயுவின் குமாரன். பெத்சாயிதாவில் பிறந்தவர். கலிலேயாவின் கடற்கரையில் இருக்கும் சிறிய கிராமம் அது. பிறகு கப்பர்நகூமில் வசித்தார். இயேசுவைப் பின்பற்றும் முன் மீன்பிடிக்கும் தொழிலை தன் தகப்பன் மற்றும் சகோதரரோடு இணைந்து செய்தார். இயேசு யோவானையும் யாக்கோபையும் அழைத்தபோது சீக்கிரமாக இயேசுவோடு இணைந்து கொண்டவர் .
இயேசுவின் ஊழியத்தில் அநேக காரியங்களை உடனிருந்து கண்டவர் . இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது அவருடைய பாதத்தின் அருகே நின்று கொண்டிருந்த ஒரே சீஷர். இயேசுவின் மீது அவர் வைத்திருந்த அன்பையும் மரியாதையையும் அது காட்டுகிறது .அவருடைய ஆரம்ப காலங்களில் கோபக்காரனாக அவர் செய்ததை மாற்கு 9 : 38 – 41 இல் காண்கிறோம். லூக்கா 9 : 51 -54 இல் வானத்திலிருந்து அக்கினியை இறக்கி அழிக்கலாமா என்கின்றார். எரிச்சலின் குணத்தை மத்தேயு 20 : 20- 24 இல் காணலாம். அதே யோவான் அனுபவத்தில் முதிர்ச்சியடையும் போது இயேசுவின் தாயை அன்போடு ஏற்றுக் கொண்டதை யோவான் 19 : 25 – 27 ல் காண்கிறோம். இயேசு உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு யோவான் ஆதித்திருச்சபையில் மிக முக்கிய பங்கு வகித்தார் .யூதர்களுக்கும் பின்பு புறஜாதிகளுக்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். கிறிஸ்தவ சமுதாயத்தில் மிகப் பெரும் ஊழியராக தலைவராக எபேசுவிலே திகழ்ந்தார். ஆசியாவில் சில பகுதிகளிலும் அவருடைய ஊழியம் இருந்தது. எபேசுவில் அவர் கைது செய்யப்பட்டு சூடான எண்ணெயிலே போடப்பட்டார் .
தேவன் அதிசயமாய் அவரை காப்பாற்றினார். பின்பு ரோமர்களால் பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டு இயேசு கிறிஸ்துவின் தரிசனத்தை பெற்று வெளிப்படுத்துதல் விசேஷத்தை எழுதினார். யோவான் மற்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார் சுவிசேஷகர் யோவான், மூப்பர் யோவான், சபையின் தலைவர். ஐந்து புத்தகங்களை புதிய ஏற்பாட்டில் எழுதியவர் .யோவான் எழுதிய சுவிசேஷம், மூன்று நிருபங்கள் 1 யோவான், 2 யோவான், 3 யோவான், வெளிப்படுத்துதல். அவருடைய எழுத்துக்கள் அன்பு விசுவாசம் கிறிஸ்துவின் தெய்வீக சுபாவம் இறையியல் நோக்கத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்துகிறது. வரலாற்றிலே அவர் வயதான நாட்கள் வரை வாழ்ந்து பின்பு 100 வது ஆண்டுகளில் எபேசுவில் மரணம் அடைந்தார் என கூறப்படுகிறது. அப்போஸ்தலர்களில் பலரும் இரத்த சாட்சியாக மரித்திருக்க யோவான் இயற்கையாக மரணம் அடைந்தார் என்கின்றனர். இறையியலாளராகவும் சுவிசேஷகராகவும் கிறிஸ்தவத்தில் அவர் ஆற்றிய பங்கு இன்றும் அர்ப்பணிப்புக்கும் விசுவாசத்திற்கும் மாதிரியாக உள்ளது. ■

## யாக்கோபு

### இடி முழக்கத்தின் மகன் தைரியமான இரத்த சாட்சி



யாக்கோபு செபதேயு மற்றும் சலோமி தம்பதியரின் குமாரன். யோவானின் சகோதரன். பெரிய யாக்கோபு என்று அழைக்கப்படுவதால் அல்பெயுவின் குமாரன் யாக்கோபினின்று வேறுபடுத்தப்படுகிறார். அவரோடு கூட அவருடைய சகோதரன் யோவான் தன் தகப்பனுடைய வலைகளை பழுது பார்த்துக் கொண்டிருந்தபோது அவர்களை கண்டு அவருக்கு பின் சென்று வரும்படி அழைத்தார். மத்தேயு 4 : 21 – 22 அவர்களுடைய பொறாமையின் குணாதிசயத்தை கண்டு இடிமுழக்கத்தின் மகன்கள் என்று பெயரிட்டார். மாற்கு 3 : 17 யாக்கோபு பேதுரு மற்றும் யோவான் ஆகியோர் இயேசுவின் முக்கியமான சீஷர்கள் பல முக்கியமான தருணங்களில் கூட இருந்தவர்கள்
அவருடைய சகோதரன் யோவானையும் அவரையும் பிரித்துப் பார்க்க இயலாது . கிறிஸ்தவ சபையில் மிக முக்கிய பங்கு வகித்தவர். அவருடைய ஊழியங்களை குறித்து மிகவும் குறைந்த அளவில் எழுதப்பட்டு இருப்பினும் ஸ்பெயின் தேசம் வரைக்கும் சுவிசேஷம் பரவ இவர் காரணமாய் இருந்தார் . இயேசுவை குறித்த இவருடைய வல்லமையான போதனையும் இவருடைய உருவமும் மிகப்பெரும் சாட்சியாக இருந்தது. முதலாம் அகிரிப்பா ராஜா அரசியல் பயமுறுத்தலாக ஆதி திருச்சபையை கண்டார். 44 ஆம் ஆண்டுகளில் யாக்கோபை வாளால் வெட்டி கொலை செய்தனர். அப்போஸ்தலர் 12 : 1 -2 யாக்கோபுவின் இரத்த சாட்சி சபைக்கு ஒரு திருப்புமுனையாக இருந்தது. தன் வாழ்வை சாட்சியாக முத்திரை பதித்தார். அப்போஸ்தலர்களுக்குள் இவருடைய விசுவாசமும் அர்ப்பணிப்பும் அசைக்க முடியாத நம்பிக்கையை இன்னும் வலுப்படுத்தியது. ■

## பர்தலமெயு ( நாத்தான்வேல் )

### கபடற்ற உத்தம இஸ்ரவேலன்



கலிலேயாவில் உள்ள கானா ஊரிலிருந்து வந்தவர் பர்தலமெயு யோவான் 21 : 2 இயேசு கிறிஸ்து முதலாவது அற்புதம் செய்த இடம் இதுதான் .இவர் நாத்தான்வேல் எனும் பெயரால் அறியப்படுகிறார்.

பிலிப்பு என்பவரால் இயேசுவிடம் அறிமுகப்படுத்தப்பட்டவர் நாசரேத்தில் இருந்து ஏதேனும் நன்மை உண்டாக கூடுமோ என்ற முதலாவது கேட்ட இந்த மனிதர் தான் யோவான் 1 : 46 . இயேசு தன்னை குறித்து அறிந்து உத்தம இஸ்ரவேலன் என தன்னிடம் கூறிய பின்பு அப்படியே அவரை விசுவாசித்து ஏற்றுக் கொண்டார். யோவான் 1 :47 பின்பு இயேசுவுக்கு பின் சென்றான். இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு பர்தலமெயு இந்தியா, மெசபடோமியா, ஈராக், பெர்சியா, ஈரான், இக்கோனியா, துருக்கி, எகிப்து, அர்மேனியா, அரேபியன், பெனின்சுலா, எத்தியோப்பியா போன்ற நாடுகளுக்கு பயணம் செய்து சுவிசேஷத்தை அறிவித்தார். இந்தியாவின் சில மொழிகளில் அவர் சுவிசேஷத்தை அறிவித்தும் , எழுதியும் இருப்பதற்கான சான்றுகள் உள்ளன. விக்கிரக வணக்கங்களை செய்து மிகவும் பக்தி வைராக்கியம் மிகுந்த அர்மேனிய மக்களில் பலரை இவர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்படி செய்தது குறிப்பிடத் தகுந்தது. அர்மேனியாவில் 68வது ஆண்டுகளில் தலை துண்டிக்கப்பட்டு கொடூரமாக இவர் கொலை செய்யப்பட்டார். அசைக்க முடியாத நம்பிக்கையை இவர் மூலம் நாம் காண முடிகிறது. ■

## யூதாஸ் காரியோத்து

### காட்டி கொடுத்தவன்



இயேசுவை காட்டிக் கொடுத்தவன் யூதாஸ். யூதேயாவில் உள்ள ஒரு கீரியாத்தை சேர்ந்த மனிதன் இந்த யூதாஸ் என சில வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள். இவர் மாத்திரமே யூதேயாவை சார்ந்தவர். பணப்பையை வைத்திருக்கிறவனாயும் திருடனாயும் இருந்தான். யோவான் 12 : 6 உலகத்தின் பால் இழுப்புண்டு பண ஆசை கொண்டு இயேசு கிறிஸ்துவோடு இருந்தும் கூட அற்புதங்களை கண்டும் அவன் மனம் மாறிப் போனான்.

வெறும் 30 வெள்ளி காசுக்காக கெத்சமனே தோட்டத்திலே இயேசுவானவரை காட்டி கொடுத்தான். மத் 26 : 14- 16 அப்பொழுது, அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியத்திடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து:குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன்பாடு என்றார்கள்.அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசை தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான் மத் 27 : 3-5 . இப்படி தன் முடிவைத்தானே தேடிக்கொண்டான். யூதாஸ் வரலாற்றில் இருந்து நாம் கற்றுக் கொள்வது பேராசை, காட்டிக்கொடுத்து துரோகம் செய்வது, நற்குணம் இல்லாமல் இருப்பது, இப்படிப்பட்ட பாவங்களினின்று நாம் மீட்கப்பட வேண்டும். தன்னுடைய நேரத்தை இயேசுவுக்காக கொடுத்தவன் அவனுடைய இருதயத்தை அவருக்காக கொடுக்காமல் இருந்து விட்டான். ■

## யாக்கோபு (அல்பேயுவின் குமாரன்)

### அதிகம் அறியப்படாதவர், உண்மையுள்ள சீஷன்



யாக்கோபு இளமையானவர், சின்ன யாக்கோபு என்று அழைக்கப்படுவதால் பெரிய யாக்கோபினின்று வேறுபடுத்தப்படுகிறார்.

இவரைக் குறித்து புதிய ஏற்பாட்டில் மிக சொற்பமாக கூறப்பட்டு இருப்பினும் அவர் கலிலேயர். சில வரலாற்று குறிப்புகளின் படி அவர் மத்தேயுவின் சகோதரர். இருவரும் அல்பேயுவின் குமாரர்கள். இது நிச்சயமற்ற குறிப்புகள். இவரை இயேசுவுக்கு உறவினர் என்றும், வேறு சில குறிப்புகள் கூறுகிறது ஆதித்திருச்சபையின் வாயிலாக மேலும் சில குறிப்புகளும் யாக்கோபை குறித்து சொல்லப்பட்டுள்ளது. அதில் அவர் முன்பு யூதேயாவிலும் பின்பு எகிப்து மற்றும் யூத மக்கள் மத்தியிலும் பல்வேறு விக்கிரக வணக்கங்களை உடைய ஜனங்கள் மத்தியிலும் சுவிசேஷத்தை அறிவித்தார் என்றும் கூறப்படுகிறது. அவர் என்ன விதமாய் மரித்தார் என்று சரியான குறிப்புகள் இல்லை. அலெக்ஸாண்ட்ரியாவின் கிளமெண்டு மற்றும் சிலரால் அவர் கல்லெறியப்பட்டு 62 ஆம் ஆண்டுகளில் மரித்தார் என்றும் கூறப்படுகிறது. பலராலும் பெரிதாக அறியப்படாத உண்மையுள்ள சீஷன் இவர். யாக்கோபு வேதத்தில் எந்த புத்தகத்தையும் எழுதாவிட்டாலும் கூட விசுவாசத்தில் உறுதியான இயேசுவின் சீஷராக அறியப்படுகிறார். தாழ்மையான குணம் அமைதியான நடக்கை எந்த ஒரு அங்கீகாரமும் இல்லாமல் தன்னை வெளிக்காட்டி கொள்ளாத குணம் படைத்தவர். ■

## மத்தேயு லேவி

### வரி வசூலிப்பவர்



கிறிஸ்துவின் போதனையை எழுதியவர் கலிலேயா கடற்கரை கிராமமான கப்பர் நகூமில் வாழ்ந்தார். மத்தேயு லேவி எனும் பெயர் கொண்டவர். இயேசுவை பின்பற்றும் முன் அவர் ஆயத்துறையில் வரி வசூலிப்பவராக இருந்தார். (மத்தேயு 9 : 9) வரி வசூலிப்பவர்களை யூதர்கள் விரும்புவதில்லை. ஏனெனில் ரோமர்களின் அதிகாரத்திற்கு கட்டுப்பட்டு அவர்கள் அதிக பணத்தை வசூலிப்பார்கள் என்பதால் யூத சமூகம் அவர்களை வெறுத்தது.

இயேசு மத்தேயுவை அழைத்தபோது அவர் எதுவுமே சொல்லாமல் உடனடியாக இயேசுவை பின்பற்றி சென்றார். மேலும் அவர் மற்ற வரி வசூலிப்பாளர்களையும் பாவிகளையும் இயேசுவை கனம் பண்ணும் பொருட்டு விருந்து ஒன்றை ஏற்பாடு செய்தார். அப்பொழுது, அவனுடைய வீட்டிலே அவர் போஜனபந்தியிருக்கையில், அநேக ஆயக்காரரும் பாவிகளும் அவரோடுகூட வந்திருந்தபடியால், அவர்களும் இயேசுவோடும் அவர் சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள்.அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம்பண்ணுகிறதை வேதபாரகரும் பரிசேயரும் கண்டு, அவருடைய சீஷரை நோக்கி: அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனபானம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள்.இயேசு அதைக் கேட்டு : பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன் என்றார் மாற்கு 2 : 15- 17.

இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு மத்தேயு மிஷனெரியாக தம் சுவிசேஷ பணியை முதன்முதலில் யூதர்கள் மத்தியில் ஆரம்பித்தார். ஆதி திருச்சபை பாரம்பரியத்தின்படி முதலாவது யூதருக்கு அவர்களுடைய தீர்க்கதரிசனங்கள் வாயிலாக நிறைவேறிய வேத வசனங்களை எடுத்துரைத்தார். மேலும் எத்தியோப்பிய மற்றும் பார்த்தியா, ஈரான், சிரியா நாடுகளுக்கும் அவருடைய ஊழியம் விரிவடைந்தது. வேதத்தில் மத்தேயு மரணத்தை குறித்து எதுவும் கூறப்படவில்லை. வரலாற்று குறிப்புகளின் படி அவர் இரத்த சாட்சியாய் மரித்தார் என்று அறிகிறோம். எத்தியோப்பியாவில் மேலும் 60 – 70 காலகட்டத்தில் மரித்திருப்பார் என தெரிகிறது. இயேசுவின் வாழ்க்கை போதனை மேசியாவை குறித்த தீர்க்கதரிசனங்களை இயேசு எப்படி நிறைவேற்றினார் என்று பல்வேறு காரியங்களை மத்தேயு சுவிசேஷத்தின் வாயிலாக நாம் தெளிவாக காண்கிறோம். கிறிஸ்துவின் வாழ்வை அர்ப்பணிப்போடு காண உதவும் மத்தேயு ஒரு புதிய ஏற்பாட்டின் மூலைக்கல் எனலாம். ■

## தோமா

### சந்தேகப்படுபவர் தைரியமானவராக மாறினவர்



தோமா சந்தேகப்படும் தோமா என்று அழைக்கப்பட்ட காரணம் அவர் இயேசுவின் உயிர்த்தெழுதலை குறித்து முதலில் நம்பவில்லை. தோமா மற்ற அப்போஸ்தலர்களைப் போலவே கலிலேயாவிலிருந்து வந்தவர். எபிரெய பாஷையில் இவருடைய பெயர் இரண்டு என்று அர்த்தம். கிரேக்க மொழியில் திதிமு என்ற பொருள்படும். அவருடைய இளமைக் காலங்களை குறித்து அதிகமான விளக்கங்கள் இல்லை. அவருடைய கேள்வி கேட்கும் மனப்பான்மையினால் அவர் எல்லா சுவிசேஷங்களிலும் அறியப்பட்டு இருக்கிறார். யோவான் சுவிசேஷத்தில் உயிர்த்தெழுந்த இயேசுவை தொட்டு பார்த்தால் தான் நம்புவேன் என்கிறார். யோவான் 20 : 24 – 29 இயேசு தோன்றி தோமாவே என்னை தொட்டுப்பார் என்று கூறியதும் தோமா ஆச்சரியப்பட்டு என் இயேசுவே என் தேவனே என்று தன் அவிசுவாசத்தை விட்டு நீங்கி விசுவாசத்தில் உறுதியானார்.

இதன் பின்பு தான் அவருடைய விசுவாச பயணம் ஆரம்பமானது. வரலாற்றுப்படி தோமாவை உயிர்த்தெழுந்த பின்பு மிகப் பெரும் தலைவராக உருவாகினார். அவர் கிழக்கு புறமாக பயணித்தார். இவர் மிகவும் உற்சாகமான சுறுசுறுப்பான அப்போஸ்தலர் அனேக வெளிநாடுகளுக்கு பயணித்தவர். குறிப்பாக 52வது ஆண்டுகளில் இந்தியாவை வந்தடைந்தார். பண்டைய கால கிறிஸ்தவ கலாச்சாரங்கள் இந்தியாவில் கேரள மாநிலத்தின் சில இடங்களில் இன்றும் பின்பற்றப்படுவதற்கு அடித்தளமாக தோமா மலபார் கடற்கரை கிராமங்களில் ஏற்படுத்திய கிறிஸ்தவ சமுதாயமே காரணம் என்கின்றனர். இவர்கள் இன்றும் தோமாவை கனப்படுத்தி தங்கள் விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகிய அவரை நினைவு கூறுகின்றனர். இப்படி ஊழியம் செய்து வந்த தோமா சுமார் 72 ஆவது ஆண்டில் சென்னை மயிலாப்பூரில் வேற்று மதத்தை சேர்ந்த ஒருவரால் ஈட்டியால் குத்தப்பட்டு கொல்லப்பட்டார். அவருடைய வாழ்க்கை நமக்கு மிகவும் தூண்டுதலான ஒன்றாக இருப்பது இந்தியா முழுவதும் உள்ள கிறிஸ்தவ சமுதாயத்தினரிடையே இன்றும் பேசப்படுகிறது. ■

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

## சீமோன் ( கானானியன் / செலோத்தே )

### உணர்ச்சிமிகு ஆர்வமுள்ள சீஷன்



கானானியனாகிய சீமோன் என்று இவர் அழைக்கப்படுகிறார். யூதேயாவில் ஆட்சி செய்த ரோமர்களுக்கு எதிரான யூத மக்களின் அரசியல் புரட்சிகளில் இவர் வன்முறையாளராக அறியப்படுகிறார்.
ஆகவே இதிலிருந்து அவர் எவ்வளவு யூத மத பற்று நிறைந்தவர் என தெரிகிறது. இவரும் கலிலேயாவை சார்ந்தவர். சுவிசேஷங்களில் நாம் காணும் அனைத்து அப்போஸ்தலர்களுக்குள்ளும் குறிப்பாக இவரை கானானியன் என்று அழைக்கின்றனர். அது அவருடைய வாழ்ந்த இடத்தை பொறுத்து அமைந்தது. செலோத்தே என்பது அரேபிய வார்த்தை. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு உற்சாகமான ஒரு சுவிசேஷராக பல்வேறு பகுதிகளில் சுவிசேஷத்தை பரவச் செய்தார். ஆதிகால திருச்சபைகள் எகிப்து, வட ஆப்பிரிக்கா, பிரிட்டன், பெர்சியா என்று பல நாடுகளுக்கும் விரிவடைய செய்தவர்.

இவருடைய மரணத்தை குறித்து சரியான விளக்கங்கள் எதுவும் இல்லை. இருப்பினும் 65 -70 காலங்களில் இவர் இரத்த சாட்சியாக மரித்திருப்பார் என நம்பப்படுகிறது. பிரிட்டனில் சிலுவையில் அறையப்பட்டு மரித்திருக்கலாம் எனவும், சில கூற்றுகள் பெர்சியாவில் மரித்தார் என்றும் சொல்லப்படுகிறது. செலோத்தே எனப்பட்ட சீமோன், சபைகள் விருத்தி அடைய காரணமாய் இருந்தவர். இவரும் நம்மால் மிக சொற்பமாக அறியப்பட்டவர் என்றாலும் அர்ப்பணிப்போடு எல்லா சமுதாயத்தினரிடமும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பரவ செய்து இயேசுவை பின்பற்றும் கூட்டத்தாரை உற்சாகப்படுத்திய பெருமை இவரை சாரும். அமைதியும் சமாதானமும் ஒற்றுமையும் வளர வழி வகுத்தவர். ■

## ததேயு (லெபேயு/ யூதாஸ் )

### உற்சாகமூட்டுபவர், தேடி அறிந்து கொள்பவர்



யாக்கோபுவின் குமாரனாகிய ததேயு யூதாஸ் எனவும் அழைக்கப்படுகிறார் லெபேயுவும் இவர் பெயரே. 4வது நூற்றாண்டைச் சார்ந்த ஜெரோம் எனும் வரலாற்று அறிஞர் இவர் மூன்று பெயர்களை உடையவராகையால் டிரைனோமியஸ் என அழைக்கிறார்.

இவருடைய பெயரை நாம் சுவிசேஷ புத்தகத்தில் பார்க்க முடிகிறது. ததேயுவும் கலிலேயாவை சார்ந்தவர். யோவான் எழுதிய சுவிசேஷத்தில் இயேசுவின் கடைசி போஜனத்தின் போது ஸ்காரியோத்தல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன என்றான் யோவான் 14 : 22 .இந்த கேள்வி இயேசுவின் ஊழியத்தை குறித்து அவர் அறியும்படி அனுப்பியது. இயேசு உயிர்த்தெழுந்த பின் ததேயு இயேசுவின் சுவிசேஷத்தை அறிவித்தார். யூதேயா, சமாரியா, சிரியா, பெர்சியா, ஈரான், அர்மேனியா போன்ற நாடுகளுக்கு பயணித்தார். ஆதிகால திருச்சபைகளை ஸ்தாபித்ததில் இவருடைய பங்கு இன்றியமையாதது .ததேயுவின் மரணத்தை குறித்து பல்வேறு கருத்துக்கள் இருப்பினும் 65 -80 காலகட்டங்களில் அவர் இரத்த சாட்சியாக மரித்தார் என நம்பப்படுகிறது. துருக்கியில் கல்லெறியப்பட்டு கொல்லப்பட்டு இருக்கலாம் என நம்பப்படுகிறது. சில வரலாற்று அறிஞர்கள் யூதா எழுதின நிருபத்தை எழுதியவர் இந்த ததேயு என்கின்றனர். ஆனால் அது இயேசுவின் சகோதரனாகிய யூதா எழுதியது என்றும் சொல்லப்படுகிறது .எப்படி இருப்பினும் விசுவாசத்தின் அடையாளமாக அங்கீகாரம் பெறுகிறார். ■

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
vedhacog1954@gmail.com

கர்த்தருக்கு பரிசுத்தம்

THE CHURCH OF GOD *Worship Place:*

**2 / 227 - Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**2 / 227, சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with Real Truth

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 CHURCH STREET,-KOLARPATTI & P.O, SOUTH INDIA - 642 107. Cell : 0091 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316